## சேர்க்கையை இரத்து செய்வதன் பேரில் கல்விக்கட்டணத்தை திரும்பப்பெறுதல் (Refund policy)

குறிப்பு : **AJ Chem கல்விச்சாலையின் முதன்மையான நோக்கம் மாணவர்கள் B.Sc.,/ M.Sc., படிக்கும்பொழுதே IIT-JAM, CUET, GATE, TRB மற்றும் CSIR-NET/ SET ஆகிய தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்கு ஏற்ற உயர்தரக் கல்வியையும், ஊக்கமளிக்கும் சூழலையும் வழங்குவது ஆகும்.**

**ஆகவே, இந்த Refund Policy-யின் எந்த பகுதியும் 22 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பொருந்தாது. 01.06.2025 தேதியின்படி 22 வயதை கடந்தவர்கள், எங்கள் கல்விச்சாலையில் சேர்க்கைக்கான கட்டணத்தை செலுத்திவிட்டு பின்பு தொகுப்பு தொடங்குவதற்கு முன்போ அல்லது பின்போ தங்களது சேர்க்கையை இரத்து செய்யவிரும்பினால், தாங்கள் செலுத்திய கட்டணத்தில் எந்த ஒரு தொகையும் திரும்ப செலுத்தப்படமாட்டாது.**

**மேலும், இந்த Refund Policy-யின் எந்த பகுதியும் ஜூன் 1 முதல் 25 வரை அல்லது டிசம்பர் 1 முதல் 25 வரை நடைபெறும் மாணவர் சேர்க்கை தவிர மற்றநேரங்களில் வகுப்பில் இணைபவர்களுக்கும் மற்றும் மற்ற ஏதேனும் சிறப்பு வகுப்புகளில் (weekend class, etc.,) இணைபவர்களுக்கும் பொருந்தாது. எனவே, இத்தகைய மாணவர்கள், எங்கள் கல்விச்சாலையில் சேர்க்கைக்கான கட்டணத்தை செலுத்திவிட்டு பின்பு தொகுப்பு தொடங்குவதற்கு முன்போ அல்லது பின்போ தங்களது சேர்க்கையை இரத்து செய்யவிரும்பினால், தாங்கள் செலுத்திய கட்டணத்தில் எந்த ஒரு தொகையும் திரும்ப செலுத்தப்படமாட்டாது.**

AJ Chem கல்விச்சாலையில், எங்கள் வகுப்புகளில் நீங்கள் 100% மகிழ்ச்சியாக இருப்பதை உறுதிசெய்ய விரும்புகிறோம்.

- உங்களுக்கு நேரலை வகுப்பு தொடர்பான தொழில்நுட்ப அல்லது பிற கேள்விகள் இருந்தால், மின்னஞ்சல் (அ) கட்செவி அஞ்சல் வழியாக எங்களைத் தொடர்புகொள்ள தயங்க வேண்டாம்.
- நீங்கள் உங்களது தொழில்நுட்ப சிரமங்களை எங்களிடம் தெரிவித்த பிறகு, அடுத்த 24 மணிநேரத்திற்குள், அத்தகைய சிக்கல்களை விரைவாக தீர்க்க தேவையான முயற்சிகள் எடுக்கப்படும். அத்தகைய சிக்கல்களைத் தீர்க்க முயற்சித்த பிறகும், எங்களது தரப்பிலான சேவையில் தாங்கள் திருப்தி அடையவில்லையெனில்,

அல்லது

- எங்களது கல்விச்சாலை தங்களுக்கு பொருத்தமானது இல்லை என்று நீங்கள் உணர்ந்தால், தாங்கள் செலுத்திய கல்விக்கட்டணத்தை திரும்பப்பெறுவதற்கான பின்வரும் வழிமுறையை பின்பற்றலாம்.

அந்தந்த தொகுப்பிற்கான வகுப்பைத் தொடங்கிய முதல் தேதியிலிருந்து 25 நாட்கள் வரை கல்விக்கட்டணத்தை திரும்பபெற விண்ணப்பிக்கலாம்.

**இவ்வாறு தாங்கள் கல்விக்கட்டணத்தை திரும்ப பெறுவதற்கு விண்ணப்பிக்கும் பொழுது பின்வரும் நிபந்தனைகளை பின்பற்றியிருக்க வேண்டும்.**

1.1. குறைந்தது 3 நாட்கள் நேரலை வகுப்பில் கலந்துகொண்டிருக்க வேண்டும்.
1.2. விண்ணப்பிக்கும் தேதிவரை அந்த தொகுப்பில்(Batch) சராசரி வருகைப்பதிவு 90%க்கு மேல் பெற்றிருக்க வேண்டும்.
1.3. வகுப்பில் பதில் கூறுவது, சந்தேகங்களை உடனுக்குடன் கேட்பது ஆகியவற்றில் ஒழுங்குமுறை (Regularity in classroom interaction)
1.4. விண்ணப்பிக்கும் தேதிவரை அந்த தொகுப்பில் சராசரியாக 90 சதவீத நாட்களுக்கும் மேலாக, குறைந்தபட்சம் 30 நிமிடங்களுடன் ஒருநாளைக்கு குறைந்தது ஒரு வகுப்பு தேர்வு வீதம் எழுதியிருக்க வேண்டும்.
1.5. தினசரி வீட்டுப்பாடங்களில் ஒழுங்குமுறை இருக்க வேண்டும் (Regularity in HomeWorks)

மேற்கண்ட 1.1 முதல் 1.5 வரையிலான நிபந்தனைகளை முறையாக பின்பற்றி கல்விக்கட்டணத்தை திரும்பப்பெற விண்ணப்பித்தவர்களுக்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் அடிப்படையில் கல்விக்கட்டணம் திரும்ப வழங்கப்படும்.

| | |
|---|---|
| Within 5 days After starting the Batch | 90 % Refund from the Total Fee |
| Within 15 days After starting the Batch | 75 % Refund from the Total Fee |
| Within 25 days After starting the Batch | 50 % Refund from the Total Fee |
| **Concern refund will be processed within Next 24Hrs.** | |

---

மேற்கண்ட 1.1 முதல் 1.5 வரையிலான நிபந்தனைகளை முறையாக பின்பற்றாமல் கல்விக்கட்டணத்தை திரும்பப்பெற விண்ணப்பித்தவர்களுக்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் அடிப்படையில் கல்விக்கட்டணம் திரும்ப வழங்கப்படும்.

| | |
|---|---|
| Within 5 days After starting the Batch | 80 % Refund from the Total Fee |
| Within 15 days After starting the Batch | 65 % Refund from the Total Fee |
| Within 25 days After starting the Batch | 40 % Refund from the Total Fee |
| **Concern refund will be processed on the 1st day of the following month.** | |

*****நிபந்தனை 1.1 - 1.3 Live Classes(Not-Mandatory) மாணவர்களுக்கு பொருந்தாது***

என்ன தவறு நடந்தது மற்றும் எங்களது சேவையை மேலும் எப்படி மேம்படுத்தலாம் என்பதை அறிய விரும்புகிறோம். எனவே, எங்களது அதிகாரப்பூர்வ இணையதளத்தின் forms பகுதியில் உள்ள Cancellation of Admission என்ற விண்ணப்பத்தின் மூலமாக, தாங்கள்

கல்விக்கட்டணத்தை செலுத்தியதற்கான இரசீதை இணைத்து, சேர்க்கையை இரத்து செய்வதற்கான காரணத்தை விரிவாக கூறி விண்ணப்பிக்கலாம்.

உங்கள் கோரிக்கையை உறுதிப்படுத்தும் பதில் உங்கள் மின்னஞ்சல் (அ) கட்செவி அஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும். ***கல்விக்கட்டணத்தை திரும்பப் பெற்ற பிறகு, நீங்கள் இங்கு மீண்டும் சேர விரும்பினால், புதிய மாணவராகக் கருதப்படுவீர்கள்.***